# NSW HEALTH

## COVID-19 Key Points – Thursday 12 August 2021

NSW GOVERNMENT

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 345 புதிய கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-ல் பதிவாகியுள்ளனர். குறைந்தபட்சம் 60 நோய்த்தொற்றாளர்கள், முழுமையான அல்லது பெரும்பாலான தமது நோய்த்தொற்றுக் காலங்களில், சமூகத்தில் தொற்று விளைவிக்கக்கூடியவர்களாக இருந்துள்ளனர்.

- கான்டர்பரி-பாங்க்ஸ்டவுன் (Canterbury-Bankstown) மற்றும் ஃபேர்ஃபீல்ட் (Fairfield) பகுதிகளில், நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே உள்ளது. இன்று மாலை 5 மணி முதல், பேசைட் (Bayside), பேர்வூட் (Burwood) மற்றும் ஸ்ட்ரத்ஃபீல்ட் (Strathfield) ஆகிய பகுதிகள், areas of concern (கவலைக்கிடமான பகுதிகள்)-ஆகக் கருதப்படும், அத்துடன் இவை கூடுதலான பொதுமுடக்க (lockdown) கட்டுப்பாடுகளுக்கு உட்படும். உங்கள் பகுதியில் உள்ள lockdown rules (பொதுமுடக்க விதிமுறைகள்) பற்றி நீங்கள் அறிந்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

- ஹன்டர் நியூ இங்லண்ட் (Hunter New England) பிராந்தியத்தில், புதிய நோய்த்தொற்றாளர்கள் சிலர் உருவாகியுள்ளனர். ஹன்டர் நியூ இங்லண்ட் (Hunter New England) முழுவதும் தற்போதுள்ள வீட்டிலேயே தங்கியிருக்கும் (stay-at-home) உத்தரவுகள், வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 20 அதிகாலை 12:01 மணிவரைக்குமாக இன்னொரு வாரத்திற்கு நீட்டிக்கப்படும்.

- நீங்கள் மற்றவர்களைப் பார்க்கச் செல்லவோ அல்லது உங்கள் வீட்டிற்கு மற்றவர்கள் விருந்தினர்களாக வரவோ கூடாது என்பதை தயவுசெய்து ஞாபகம் வைத்திருங்கள்.

- முற்றுமுழுதாக அவசியமாக இருந்தால் மட்டுமே உங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லவும் - எவ்வளவுக்கு நீங்கள் கூடுதலாக வெளியே செல்கிறீர்களோ, அவ்வளவுக்கு நீங்கள் கோவிட்-19 நோய்த்தொற்றைப் பெறும் வாய்ப்பானது கூடுதலாக உள்ளது.

- நேற்று, 106,000-க்கும் அதிகமான மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர். தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன்வருவதன் மூலம், உங்களையும், உங்கள் குடும்பங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும், அத்துடன் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்கவும்.

- 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய எவரும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம். நீங்கள் Vaccine Eligibility Checker-க்குச் செல்லலாம் அல்லது உங்களுக்கு அருகாமையில் கிடைக்கக்கூடிய முன்பதிவுச் சந்திப்புகளைக் கண்டறிய, Hot Doc-ஐப் பயன்படுத்தலாம்.